தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>சென்னையில் சில இடங்களில் மழை</u>

தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கைக்கு அருகில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளதையடுத்து. தமிழகம், புதுவையின் சில இடங்களில் புதன்கிழமை கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் இன்று சென்னை பட்டினப்பாக்கம் , மயிலாப்பூர், மந்தைவெளி, மற்றும் பொன்னேரி, பெரியபாளையம் திருவெற்றியூர், மணலி, எண்ணூர் பகுதிகளிலும் மழைபெய்து வருகிறது. இந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக தமிழகம், புதுவையின் சில இடங்களில் அடுத்த 2 நாள்களுக்கு கனமழை பெய்யும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### <u>வைகை அணையில் இருந்து இன்று முதல் தண்ணீர் திறப்பு: முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உத்தரவு</u>



வைகை அணையில் இருந்து புதன்கிழமை (டிச. 10) முதல் தண்ணீர் திறந்து விட முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பு: தேனி மாவட்டத்திலுள்ள வைகை அணையில் இருந்து வைகை பழைய பாசன பகுதி 1-ன் கீழுள்ள நிலங்களுக்குப் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விட விவசாயிகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களது வேண்டுகோளை ஏற்று, வைகை அணையில் இருந்து புதன்கிழமை முதல் தண்ணர் திறந்து விட உத்தரவிடப்படுகிறது. இதனால், மதுரை மாவட்டத்திலுள்ள 27 ஆயிரத்து

259 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் என்று ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

## சில இடங்களில் மழை வாய்ப்பு

தமிழகம், புதுவையின் சில இடங்களில் புதன்கிழமை பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கைக்கு அருகில் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலை செவ்வாய்க் கிழமையும் அதே இடத்தில் நீடித்தது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலையின் காரணமாக தமிழகம், புதுவையின் சில இடங்களில் அடுத்த 2 நாள்களுக்கு பலத்த மழை பெய்யும் என அதிகாரிகள் தெரிவித்தனர். வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் புதன்கிழமை ஆங்காங்கே மிதமான மழை முதல் பலத்த மழை வரை பெய்யும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். மாலை அல்லது இரவில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்யும். இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் 30 மி.மீ. மழையும், பாளையங்கோட்டை, சாத்தூர், சென்னை, கயத்தாறு, திருச்செந்தூர், இரணியல், குன்னூரில் 10 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

## டின்களில் குலோப் ஜாமூன்-ரசகுல்லா: ஆவின் புதிய திட்டம்

குலோப்ஜாமூன்-ரசகுல்லா போன்ற பால்பொருள்களை டின்களில் அடைத்து விற்பனை செய்யும் திட்டம் விரைவில் நடைமுறைக்கு வரும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது. ஆவின் செயல்பாடுகள் குறித்து சென்னையில் பால்வளத் துறை அமைச்சர் பி.வி.ரமணா தலைமையில் செவ்வாய்க்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அவர் பேசியது: பால் உற்பத்தியாளர்களுக்கு பால் பணம்,

குறித்த நேரத்தில் பட்டுவாடா செய்யப்பட வேண்டும். அம்பத்தூரில் புதிதாக நாளொன்றுக்கு 15 ஆயிரம் லிட்டர் ஐஸ்கீரிம், ஆயிரம் கிலோ பன்னீர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை சுமார் ரூ.21 கோடி செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இந்த தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் வரும் அடுத்த ஆண்டு ஜூனில் முடிவடையும். புதிய பால் பொருள்கள் அறிமுகப்படுத்தவும், அதிக நாள்கள் கெடாமல் இருக்கும் வகையில் டின்களில் அடைக்கப்பட்ட குலோப்ஜாமூன், ரசகுல்லா போன்ற பால் பொருள்களும் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் பி.வி.ரமணா தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் பால்வளத் துறைச் செயலாளர் விஜயகுமார், ஆவின் நிர்வாக இயக்குநர் சுனில் பாலிவால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரத்தில் திடீர் மழை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை திடீரென மழை பெய்ததால், சாலைகளில் மழை நீர் வெள்ளமென ஓடியது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 20 நாள்களாக மழை இல்லாமல் இருந்தது. இரவில் குளிர் வாட்டி எடுத்தது. பருவ மழை பொய்த்துவிட்டதே என விவசாயிகள் ஏமாற்றத்துடன் காணப்பட்டனர். ஏரிகளிலும் தண்ணீர் இல்லாமல் கடும் வறட்சியாக காணப்பட்டது. இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை முதல் திடீரென மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்யத் தொடங்கியது. காஞ்சிபுரத்தில் மாலை 3 மணிக்கு பலத்த மழை கொட்டித் தீர்த்தது. அரை மணி நேரம் பெய்த மழையால் சாலைகள் எங்கும் மழைநீர் வெள்ளமாக ஓடியது. ஏரிகளுக்கு நீர் வரும் அளவுக்கு மேலும் சில நாள்கள் மழை பெய்தால் விவசாயத்துக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று விவசாயிகள் விருப்பம் தெரிவித்தனர்.

## மேகமலை அருவியில் நீர்வரத்து அதிகரிப்பு

மேகமலை அருவியில் குளிப்பதற்கு ஏற்றவாறு நீர்வரத்து ஏற் பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. தேனி மாவட்டம், கடமலைக்குண்டு அருகே மேகமலை அருவி உள்ளது. இது, தேனியில் இருந்து 45 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு செல்வதற்கு நேரடியாக பேருந்து வசதி கிடையாது. எனவே, வாகனங் களில் மட்டுமே சென்று வரமுடியும். மேகமலையில் மழை பெய்யும் போது, இந்த அருவிக்கு நீர் வரத்து ஏற்படுகிறது. மேகமலையில் உள்ள பல வகையான மூலிகைகள் ஊடே வருவதால், இந்த அருவியில் குளித்தால் புத்துணர்ச்சி ஏற்படுவதுடன், பல்வேறு நோய்களும் தீரும் என்றும் கூறப்படுகிறது. சில நாள்களுக்கு முன், மேகமலைப் பகுதியில் கனமழை பெய்ததால், மேகமலை அருவியில் நீர் வரத்து அதிகமாகி, சுற்றுலாப் பயணிகள் குளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது, நீர் வரத்து குறைந்து வருவதால், சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு ஏற்ற சூழ்நிலை நிலவுகிறது. எனவே, இங்கு சுற்றுலாப் பயணிகளின் வரத்து அதிகரித்துள்ளது.

## விருதுநகர் மாவட்டத்தில் ஆண்டுக்கு ஆண்டு அதிகரிக்கும் மக்காச்சோளம் சாகுபடி

பராமரிப்பு செலவு குறைவு, அதிக மகசூல் மற்றும் சந்தை வாய்ப்பால் விருதுநகர் மாவட்டத்தில் மக்காளச்சோளம் பயிரிடும் பரப்பளவு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சுமார் 1.40 லட்சம் ஹெக்டேர் விளைநிலங்களில், மானாவாரி யிலும், கிணற்றுப் பாசனத்திலும் சுமார் 1.20 லட்சம் ஹெக்டேரில் நெல், கடலை, கம்பு, சோளம், மக்காச்சோளம், கேப்பை, குதிரைவாலி, பயறு

வகைகள் பயிரிடப்படுகின்றன. நிகழாண்டில் விதைப்பு நாள் முதல் அவ்வப்போது பரவலாக மழை பெய்ததால் பயிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன. மானாவாரி மற்றும் கிணற்றுப் பாசனத்தில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். விருதுநகர், சிவகாசி, வெம்பக் கோட்டை, சாத்தூர், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் அதிகமாகவும், அருப்புக்கோட்டை, திருச்சுழி, காரியாபட்டி, நரிக்குடி பகுதிகளில் மானாவாரியில் குறைந்த அளவிலும் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். இந்த சாகுபடிக்கு உரம் மற்றும் பராமரிப்பு செலவு குறைவு. மேலும், விதைப்பு நாளிலிருந்து 30 நாள்களுக்கு பராமரித்தாலே போதும். அவ்வப்போது மழை பெய்தால் செலவு செய்த தொகைக்கு ஏற்ப சாகுபடியும் அதிகரிக்கிறது. எனவே நஷ்டம் இருக்காது என்பதால் விவசாயிகளின் விருப்பப் பயிராக மக்காச்சோளம் உள்ளது. மாவட்டத்தில் மக்காச்சோளம் 1.20 லட்சம் டன் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதைவிட அதிகமாகவே சாகுபடி செய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இது தொடர்பாக வேளாண்மை துறை அதிகாரி முனீஸ்வரன் கூறுகையில், அரசு தானிய வகைகளை அதிகம் உற்பத்தி செய்வதற்காக விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. தானிய வகையான மக்காச்சோளத்தில் கார்போஹைட்ரேட் என்ற மாவு சத்து, புரோட்டீன் சத்து, கண்பார்வைக்கான விட்டமின்-எ, குழந்தைகளுக்கான சத்து மாவு தயாரிக்க பயன்படுகிறது. அதேபோல், தாது பொருள்கள் சத்து நிறைய உள்ளதால் கால்நடை தீவனம் தயாரிக்க இதன் தேவை அதிகரித்து வருகிறது. நல்ல விலையும் கிடைக்கிறது. இதனால் இப்பகுதியில் சாகுபடியும் அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

**கொள்முதல்நிலையம்தேவை**

சிவகாசி வட்டார நீர்ப்பாசன சங்கத் தலைவரும், மக்காச்சோள விவசாயியுமான ராமானுஜம் கூறியதாவது: சன்னரக மக்காச் சோளத்தை

மானாவாரியில் பயிரிட்டால் ஒரு ஏக்கருக்கு 19 முதல் 22 குவின்டாலும், கிணற்றுப் பாசனத்தில் பயிரிட்டால் 25 முதல் 30 குவின்டாலும் மகசூல் கிடைக்கும். வீரிய ஒட்டு ரகம் விதைத்தால் மானாவாரியில் 25 முதல் 30 குவின்டாலும், பாசனத்தில் 36 முதல் 40 குவின்டால் வரையிலும் மகசூல் கிடைக்கும். இப்பயிர் செய்தால் அதிக வேலைப்பளு இருக்காது, பராமரிப்பு செலவும் குறைவு. இன்னும் இரண்டு வாரங்களில் அறுவடை தொடங்க உள்ளது. இதன் தேவையும் அதிகமாக இருக்கிறது. மக்காச் சோளத்திற்கு மத்திய அரசு ஒரு குவின்டாலுக்கு ரூ.1400 விலை நிர்ணயம் செய்துள்ளது. தற்போது, வெளிமார்க்கெட்டில் ரூ.1350 ஆக உள்ளது. அறுவடை நேரத்தில் வியாபாரிகள் "கூட்டு' அமைத்து குறைவான விலையை நிர்ணயம் செய்வார்கள். இதைத் தடுக்கும் வகையில் அரசே கொள்முதல் நிலையம் அமைத்து வாங்கினால் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும் என்றார்.

**அதிகரிக்கும்- சாகுபடிபரப்பளவு**

**ஆண்டு - ஹெக்டேர்**

2010-11 11,775

2011-12 17,205

2012-13 23,483

2013-14 24,263

2014 -15 18,181

கிணற்றுப்பாசனத்தில் விதைப்பு பணிகள் நடந்து வருவதால் பரப்பளவு அதிகரிக்கும். தகவல்: வேளாண்மைத் துறை

## <u>பிதர்க்காடு பகுதியில் உழவர் மன்றம் திறப்பு</u>

பந்தலூர் வட்டத்திலுள்ள பிதர்க்காடு பகுதியில் உழவர் மன்றம் திறப்பு விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. பிதர்க்காடு சமுதாயக்கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சுந்தர பாரதி தலைமை வகித்தார். உழவர் மன்றங்கள் அரசின் நலத்திட்டங் களை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து எடுத்துரைத்தார். நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் இனிகோ அருள்செல்வன் உழவர் மன்றத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தோட்டக் கலைத் துறை கள அலுவலர் அம்பிராஜன், கூட்டுறவு வங்கியின் செயலர் முகமது, தலைவர் ராபர்ட் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சிக் கான ஏற்பாடுகளை சி.டி.ஆர்.டி. அறக்கட்டளையின் நிகழ்ச்சி அலுவலர் என்.செந்தில்குமார் செய்தார்.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

### <u>தேனீக்களின் தெவிட்டாத வருமானம்</u>



மதுரை சத்திரப்பட்டி கல்லம்பட்டியில் மாந்தோப்பில் ஐந்து தேனீப்பெட்டிகளின் மூலம் 45 நாட்களுக்கு ஒருமுறை லாபம் ஈட்டுகிறார் விவசாயி செல்வம். அவர் கூறியது: மாந்தோப்பில் ஒரே மரத்தைச் சுற்றி ஐந்து தேனீப்பெட்டிகளை வைத்தேன். இதற்கு இடவசதி தேவையில்லை. தோட்டக்கலை இயக்கம் மூலம் தேனீப்பெட்டி, தேனீக்கள் வாங்குவதற்கு

50 சதவீத மானியம் கிடைத்தது. பெட்டி வைத்த 45வது நாளில் இரண்டுலிட்டர் தேன் கிடைத்தது. இப்போது மூன்று முதல் நான்கு லிட்டர் வரை கிடைக்கிறது. பெட்டியின் கீழ்ப்பகுதியை ஸ்டாண்டால் இணைத்து மண்ணில் ஊன்றியுள்ளேன். ஸ்டாண்டில் வார்னிஷ் பூசியுள்ளதால் பூச்சி, எறும்புத் தொந்தரவு இருக்காது. மரப்பெட்டியின் மேல் பாலிதீன் ஷீட்டால் மூடினால் மழையில் நனையாது. பூக்கள் அதிகமாக இருக்கும் போது ஐந்து லிட்டர் தேன் கிடைக்கும். லிட்டருக்கு ரூ.300 முதல் ரூ.350 வரை கிடைக்கிறது. ஒருமுறை முதலீடு செய்தேன். 45 நாளில் முதலீடு கையில் கிடைத்து விட்டது. அடுத்தெல்லாம் லாபம் மட்டும் தான். மானியம் குறித்து மேற்கு ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குனர் காமராஜ் கூறியது: சொந்த நிலம் இருக்க வேண்டும். நிலத்திலோ, நிலத்தைச் சுற்றியோ பூக்கும் தாவரங்கள் இருக்க வேண்டும். சிட்டா, அடங்கல், ரேஷன் கார்டு நகல், போட்டோ கொடுத்தால் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் தேனீப் பெட்டிக்கு ரூ.800, தேனீக் களுக்கு ரூ.700 என ரூ.1500 வீதம் ஒரே விவசாயிக்கு 50 பெட்டிகள் அமைப்பதற்கு மானியம் தரப்படும். ஒரு ஏக்கருக்கு ஐந்து பெட்டிகள் தான் அனுமதி. பூந்தோட்டமாக இருந்தால் கூடுதல் பெட்டிகளை வைக்கலாம் என்றார். மானிய விவரங்களுக்கு: 98652 80167. **-எம்.எம்.ஜெயலட்சுமி மதுரை.**

## <u>*சின்ன சின்ன செய்திகள்*</u>



பூச்சி, நோய்கள் தாக்குதல் பற்றிய சிறப்பு செய்திகள் : **சோளம் :** மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள சோளம் மற்றும் மக்காச்சோளம் பயிர்களில் சோளக்குருத்து ஈ, தண்டு துளைப்பான்

மற்றும் களர் துளைப்பான் ஆகியவற்றின் தாக்குதலும், அடிச்சாம்பல் நோய் தாக்குதலும் பரவலாகக் காணப்படுகிறது. இத்தாக்குதலை 5 சதவீதம் வேப்பங்கொட்டைச்சாறு தெளித்து கட்டுப்படுத்தலாம். அல்லது 50 கிராம் கருவாட்டுத்தூளை தண்ணீர் தெளித்து ஒரு பாலிதீன் பையில் கட்டி, குண்டூசிகளால் துளையிட்டு ஒரு டப்பாவில் வைத்து மூடி நான்கு இடங்களில் தொங்க விட்டால் இந்த வாசனைக்கு கவரப்பட்டு வரும் பூச்சிகள் இறந்து விடும். பூஞ்சாணக் கொல்லியைத் தெளிப்பதன் மூலம் நோய்களைக் கட்டுப்படுத்தலாம். **நிலக்கடலை** : நிலக்கடலையில் சிவப்பு கம்பளிப்புழுத் தாக்குதல், வேர் அழுகல் நோய் மற்றும் டிக்கா இலைப்புள்ளி நோய் தாக்குதல் ஆகியவை காணப்படும். வரப்பு ஓரங்களில் ஓர் அடி அகல, ஆழத்தில் குழி எடுத்து அடுத்த நிலங்களுக்கு புழு செல்வதைத் தடுக்க வேண்டும். மாலையில் ஒரு மணி நேரம், காலையில் ஒருமணி நேரம் விளக்குப்பொறி வைத்து, தாய் அந்துப்பூச்சிகளை அழித்தால் புழுக்கள் வராது. அதிகமான நேரம் விளக்குப்பொறி வைத்தால் அதிக அளவில் நன்மை செய்யும் பூச்சிகள் கவரப்பட்டு இறந்து விடும். நோய்களைக் கட்டுப்படுத்த 250 கிலோ தொழு உரத்தில் இரண்டரை கிலோ சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் அல்லது டிரைகோ டெர்மோ விரிடியைக் கலந்து தூவ வேண்டும். **பயறுவகைப் பயிர்கள் :** பயறுவகைப் பயிர்களில் மஞ்சள் தேமல் நோயை உண்டாக்கும் அசுவினி, வெள்ளை ஈ, நீல வண்ணத்துப் பூச்சி ஆகியவை தாக்கக் கூடும். அதோடு சாம்பல் நோய், வேர் அழுகல் நோய் ஆகியவை வரலாம். விளக்குப்பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிப்பதுடன் 5 சதவீத வேப்பங்கொட்டைக் கரைசல் தெளிக்கலாம். குறிப்பாக அசுவினி மற்றும் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 40 கிராம் மீன் சோப்புடன், ஒரு மில்லி காதி சோப் கரைசலையும் சேர்த்து தெளிக்க வேண்டும். **பருத்தி :** 80 முதல் 90 நாட்கள் வயதுடைய மானாவாரி பருத்திச் செடிகளில் புகையிலைப்புழு மற்றும் புருடீஸ்யா புழுவின் தாக்குதலும், இலைக்கருகல் நோய், வேர் அழுகல்

நோய், காய் அழுகல் நோய் ஆகியவற்றின் தாக்குதலும் காணப்படும். பூச்சி தாக்குதலைக் கட்டுப்படுத்த விதைக்கும் போதே பொறிப்பயிராக ஆமணக்கு விதைக்க வேண்டும். ஆமணக்குச் செடிகளை பூச்சிகள் தாக்குவதைத் தெரிந்து கொண்டு தடுப்புமுறைகளை கையாள வேண்டும். விளக்குப்பொறி வைத்து தாய் அந்துப்பூச்சிகளை அழிக்கலாம். மேலும் பருத்தி இனக்கவர்ச்சிப் பொறியை 10 மீட்டர் இடைவெளியில் 5 இடங்களில் வைத்து ஆண் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். நோய்களின் தாக்குதலைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ் ப்ளோரசன்ஸ் அல்லது டிரைகோடெர்மா விரிடி இவற்றில் ஏதாவது ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற விகிதத்தில் கலந்து செடிகளின் முழுவதும் நனைவது போல தெளிக்க வேண்டும். **கரும்பு :** கரும்பு பயிரில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். 4 முதல் 5 மாதங்களில் சாய்ந்த கரும்புகளில் இடைக்கணுப்புழுவின் தாக்குதல் தென்பட வாய்ப்புகள் உள்ளன. இவற்றைக் கட்டுப்படுத்த 15 நாட்கள் இடைவெளியில் 5 முறை 1 சி.சி. என்ற அளவில் முட்டை ஒட்டுண்ணிகளைக் கட்டி விட வேண்டும். **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>இயற்கை விவசாயத்தில் பார்த்தீனியம்</u>



பல தென்னந்தோப்புகளில் விவசாயிகள் பார்த்தீனியத்தை ஒரு எதிரியாக பாவித்து அதனை கங்கணம் கட்டிக்கொண்டு அழித்திட அதிக காசு செலவு செய்து களைக்கொல்லி மருந்து தெளித்து கடும் நஷ்டத்துக்கு ஏன் மண்ணின் உயிர்க்குலங்கள் நாசமாகி மலடாகி தென்னந்தோப்பே வறண்ட காடு போலக்காட்சியளித்திடச் செய்கிறார்கள். இறைவன் தந்த வரங்கள் தான் தாவரங்கள். அதில் தானாக வளரத் திறன் கொண்ட தாவரமான பார்த்தீனியம் நம்மால் தான் நிலத்துக்கு கொண்டு வரப்பட்டது என்பது விசித்திரமான உண்மையாகும். அரை அடி முதல் 3

அடி வரை மண் கண்டத்துள்ளே அங்கிங்கெணாதபடி களை விதைகள் பல்கி பரவிக் கிடப்பதே அரைகுறையான மட்காத குப்பை உரத்தை இடுவதால் தான். ஆம், கால்நடை உண்ட களைச்செடி விதைகள் சாணத்துடன் வெளியே வந்து பத்திரமாக மேற்பரப்பில் பதப்படுத்தப்பட்டு பிறகு எடுத்து வீசும்போது நீரைக்கண்டதும் குப்பென்று வளர்ந்து விடுகிறது. எனவே களைகள் வரும் இந்த வழியை மாற்றி யோசித்து மண்புழு உரமாக இட்டால் நிச்சயம் களைக்கு வேலையில்லை. அப்படியே களைகள் வந்தாலும் அதனை முறையாக சேகரம் செய்து மட்கச் செய்து மகத்தான உரமாக மீளப்பயன்படுத்தலாம். இதற்கு எந்தக் களையானாலும் விதிவிலக்கல்ல. நல்ல இலைப்பரப்பு அதிகம் கொண்ட பசுந்தழைகள் அடங்கிய பலவித மரங்களின் இலைகளையும் சேகரம் செய்து பார்த்தீனியம் மற்றும் இதர புல்வகைச் களைகளையும் களை நீக்கும் கருவிகள் கொண்டு அறுத்து வதங்க வைத்து அப்புறப்படுத்தி பதப்படுத்தி மண்புழு உரக்குழியில் இட்டு மண்புழு உரமாக மாற்றலாம். அல்லது இதற்கு கம்போஸ்ட் குழி தயாரித்திட எல்லா இடத்திலும் வாய்ப்புள்ளது. நீளம் 15 அடி அகலம் 8 அடி மற்றும் ஆழம் 3 அடி உள்ள குழிகள் தோண்டினால் ஒரு ஏக்கருக்குத் தேவையான உரம் பெற வாய்ப்புள்ளது. திடல்கள், சேமிப்பு கூடங்கள் மற்றும் நடைபாதைகள், கல்வி சாலைகள், பூங்காக்கள் பேருந்து நிறுத்தங்கள் இங்கு வளர்ந்துள்ள பார்த்தீனியத்தை 10 லிட்டர் தண்ணீரில் 1.5 கிலோ சாப்பாட்டு உப்பு கரைத்து தெளித்து சுத்தமாக அழிக்கலாம். உயிரியல் முறைப்படி "சைக்கோகிரம்மா' எனும் புள்ளி உடைய ஈச்சங்காய் போன்ற மஞ்சள் வண்ண வண்டுகளை சேகரம் செய்து பார்த்தீனியம் உள்ள இடத்தில் மெதுவாக அவற்றை சுத்தமாக அழிக்கலாம். களை வரும் முன்பே முந்தி ஊடுபயிர்,மூடு பயிர், வரப்பு பயிர் மற்றும் நிலப்போர்வை அமைத்தல் மூலம் பார்த்தீனியம் தரும் பாதிப்பை வெகுவாகக் குறைக்கலாம். மேலும் விவரம் பெற 98420 07125 எண்ணில் தொடர்பு கொள்ளவும். **- டாக்டர். பா.இளங்கோவன் உடுமலை, திருப்பூர்.**

## நெல் பயிரில் நோய் தாக்குதல்: அதிகாரி ஆலோசனை

விக்கிரவாண்டி: விக்கிரவாண்டி வட்டத்தில் நெல் பயிரில் தாக்கிய நோயை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மை அதிகாரி ஆலோசனை வழங்கியுள்ளார் . விக்கிரவாண்டி வேளாண்மை அலுவலக உதவி இயக்குனர் செல்ல பாண்டியன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: விக்கிரவாண்டி வட்டாரத்தில் 4 ஆயிரம் எக்டேரில் சம்பா பருவ நெல் பி.பி.டி., 5204, ஏ.டி.டி., 39 மற்றும் ஏ.டி.டி., 49 ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளது. வட கிழக்கு பருவ மழை பெய்வதால் நெல் பயிரில் இலை கருகல் மற்றும் இலை கீற்று நோய் தாக்கியுள்ளது. விவசாயிகள் நோயை கட்டுப்படுத்த வயலில் தேங்கிய தண்ணீரை வடி கட்ட வேண்டும் . நோய் தாக்கம் அதிகம் இருக்கும் வயல்களில் ஏக்கருக்கு காப்பர் ஹைட்ராக்சைடு ஒரு கிராம் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். ஏக்கருக்கு ஸ்டெப்டோமைசின் மற்றும் டெட்ரா சைக்கிளின் 120 கிராம் மற்றும் காப்பர் ஆக்சி குளோரைடு 500 கிராம் ஆகியவற்றை ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். நோயின் ஆரம்ப நிலையிலேயே தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் . இவ்வாறு செய்தி குறிப்பில் உதவி இயக்குனர் செல்வ பாண்டியன் தெரிவித்துள்ளார்.

## நல்லாவூரில் 200 ஏக்கர் நெற்பயிரில் புகையான் பாதிப்பு

திண்டிவனம்: நல்லாவூர் கிராமத்தில் புகையான் தாக்கத்தால் 200 ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர்கள் பாதித்துள்ளது. திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் நோயியல் துறை விஞ்ஞானிகள் நல்லாவூர் கிராம வயல்களில் ஆய்வு செய்தனர். இதில் 200 ஏக்கருக்கு மேற்பட்ட நிலபரப்பில் நெற் பயிர்கள் புகையான் பாதித்துள்ளது. பல விவசாயிகள் பிபிடி என்ற நெல் ரகத்தை பயிர் செய்துள்ளனர். இந்த ரகம் பின் சம்பாவில் பயிரிட்டால் எளிதில் புகையான் பாதிக்கும். புகையான் தாய் மற்றும் குஞ்சுகள் பயிரின் அடிப்பகுதியில் இருந்து கொண்டு சாற்றை

உறிஞ்சும். இந்த பயிர்கள் காய்ந்து தீய்ந்தது போல் வட்டமான திட்டுகளாக காணப்படும். இந்த பூச்சிகளின் முட்டைகள் இலை உறைகளில் தொகுதிகளாக இடப்பட்டு, முட்டையிலிருந்து பொறிந்து வெளிவரும் இளம் குஞ்சுகள் வெண்மையான நிறத்தில் இருக்கும். முதிர்ந்த தத்துப்பூச்சிகள் கரும் பழுப்பு உடலை கொண்டு பக்கவாட்டில் நகரும் தன்மையுடையது. புகையானை கட்டுப்படுத்த, வயலில் இருந்து தண்ணீரை முற்றிலுமாக வடிக்கவும், அதிகமான தண்ணீர் பாய்ச்ச கூடாது. வயலில் விளக்கு பொறி அமைத்து புகையானை கவர்ந்து அழிக்கலாம். தேவைக்கு அதிகமான தழைச்சத்து உரங்களை பயன்படுத்த கூடாது. பூச்சிகளின் பொருளாதார சேத நிலை ( ஒரு தூருக்கு 2 புகையான்) அறிந்து பூச்சிக் கொல்லிகளை பயன்படுத்த வேண்டும். ஒரு தூரில் புகையான் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு, வேப்பஎண்ணெய் 5 லிட்டர் அல்லது வேப்பங்கொட்டை சாறு 25 கிலோ அல்லது அசாடிராக்டின் 1000 மி.லி அல்லது இமிடா குளோபிரிட் 100 முதல் 125 மி.லி அல்லது தயோமீத்தாக்சாம் 100 கிராம் கைத்தெளிப்பான் மூலம் மாலை வேளைகளில் பயிரின் தண்டுப்பகுதியில் நன்கு நனையும்படி தெளிக்கவேண்டும். இவ்வாறு வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## ரூ. 65 லட்சம்மஞ்சள் ஏலம்

ராசிபுரம்:நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 65 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது.நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். மசாலா தயாரிக்கும் நிறுவனங்கள்

நேரடியாக வந்து மஞ்சளை வாங்கி செல்கின்றனர்.இந்நிலையில், நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,438 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 8,700க்கும், குறைந்த பட்சம், 6,360 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,969க்கும், குறைந்த பட்சம், 6,190 ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 14 ஆயிரத்து, 229க்கும், குறைந்த பட்சம், 11,699 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 65 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## 12 ஆயிரம் வாழைத்தார்சொசைட்டியில் விற்பனை

கோபி:கோபி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், இந்த வாரம், 12 ஆயிரம் வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. கடந்த வாரத்தை காட்டிலும், இந்த வாரம் விலை அதிகரித்தது. கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும், வாழைத்தார், தேங்காய் உள்ளிட்ட வேளாண் விலை பொருட்கள் ஏலம் நடக்கிறது. இந்த வாரம், 12 ஆயிரம் வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. கதளி கிலோ, 42 ரூபாய்க்கும், நேந்திரன், 33, செவ்வாழைத்தார், 750, ரஸ்த்தாளி, 425, தேன்வாழை, 500, ரொபஸ்டா, 420, பூவன், 400, மொந்தன், 300, பச்சைநாடான், 250 ரூபாய்க்கும் விற்றன. ஒரே நாளில் வாழைத்தார்கள், 11 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. 23 ஆயிரம் தேங்காய்கள் விற்பனைக்கு வந்தன. 6.50 முதல் சராசரியாக, 17 ரூபாய்க்கு விற்பனையானது.

## நெல்லையில் இரவில்பலத்த மழை பெய்தது

திருநெல்வேலி ;நெல்லையில் இரவில் பலத்த மழை பெய்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்துள்ளது. பாபநாசம், மணிமுத்தாறு உள்ளிட்ட 11 அணைகளும் நிரம்பி வருகின்றன. பெரும்பான்மையான குளங்களும்

நிரம்பிவிட்டன. தாமிரபரணி பாசன பகுதி உள்பட மாவட்டம் முழுவதும் பிசான நெல்சாகுபடி தொடர்ந்து நடக்கிறது. இந்நிலையில் சில நாட்கள் இடைவெளிக்கு பிறகு பலத்த மழை பெய்தது. பகலில் வெயில் அடித்தது. இரவு ஏழு மணிக்கு பிறகு இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

## கோழிப்போர் விளையில் 27 மி.மீ. மழைபதிவு

நாகர்கோவில்: தென்மேற்கு வங்க கடலில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக குமரி மாவட்டத்தின் பல பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது. கோழிப்போர்விளை, இரணியல், குளச்சல், அடையாமடை பகுதிகளில் பலத்த மழை பெய்தது. அதிக பட்சமாக கோழிப்போர்விளையில் 27மி.மீ. மழை பதிவானது. எனினும் அணை பகுதிகளில் மழை இல்லை. பேச்சிப்பாறை அணைக்கு 173 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 255 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையில் நீர்மட்டம் 45.20 அடியாக இருந்தது. பெருஞ்சாணி அணைக்கு 154 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. 309 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 75.38 அடியாக உள்ளது.

## மானிய விலையில் குச்சி தீவனம் விநியோகம்

நாகர்கோவில் : பால் உற்பத்தியாளர்களுக்க குமரி மாவட்ட ஆவின் நிறுவனம் சார்பில் மானிய நிலையில் குச்சி தீவனம் வழங்கும் விழா வெள்ளமடம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நடைபெற்றது. கலெக்டர் சஜ்ஜன்சிங் சவான் தலைமை வகித்தார். பால்வளத்தலைவர் அசோகன் முன்னிலை வகித்தார். முன்னாள் அமைச்சர் பச்சைமால் எம்.எல்.ஏ. குச்சிதீவனங்களை வழங்கி பேசினார். நான்கு ரூபாய் மானிய விலையில் வழங்கும் இந்த தீவனத்தால் பால் உற்பத்தியாளர்கள் பயன்பெறுவார்கள் என்றும், 4200 பால் உற்பத்தியாளர்கள் இதன் மூலம் பயன்பெறுவார்கள் என்றும் பச்சைமால் கூறினார். தோவாளை ஒன்றிய

தலைவர் தாணம்மாள், ஒன்றிய தலைவர் பூதலிங்கம், தோவாளை ஒன்றிய செயலாளர் மணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>நெற்பயிரை தாக்கும் குலை நோயை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் ஆலோசனை</u>**

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயிகள் அதிகம் நெற்பயிரினை சாகுபடி செய்துள்ளனர். நெற்பயிர்களில் தற்போது குலை நோய் தாக்குதல் அதிகம் பரவிவருகிறது. இந்நோய் பாதித்தால் நெற்பயிர்கள் சாம்பல் நிறத்தில் காணப்படும். இந்நோயானது காற்றில் மிகுதியான ஈரப்பதம், தொடர் மழை மற்றும் பயிரில் மிகையான தழைச்சத்து ஆகியவற்றால் குலைநோய் தாக்கப்படுகிறது. இவை கதிர்வரும் பருவ நிலையில் தாக்கக்கூடியது. இலையின் மேல் வெண்ணிறத்திலிருந்து சாம்பல்நிறமாகவும், கண் வடிவ புள்ளிகளும் காணப்படும். பல புள்ளிகள் ஒன்றுசேர்ந்து தாக்கும்போது பயிர் முழுவதும் எரிந்தது போன்று தோற்றமளிக்கும். இதனை குலைநோய் என்றழைக்கிறோம். மேலும், இந்நோய் தாக்கும்போது கதிர் மணிகள் சுருங்கியும், கதிர்கள் உடைந்து தொங்கும். நெற்பயிரின் கணுக்கள் கருப்புநிறமாகமாறி உடைந்து விடும் இது கணுக்குலைநோய் எனப்படும். இந்நோய்களை கட்டுப்படுத்த நெற்பயிர் வளர்ச்சி மற்றும் பஞ்சு கட்டும் தருணத்தில் ஒரு ஏக்கருக்கு ட்ரைசைக்ளோசோல் அல்லது கார்பன்டாசின், மேன்கோசெப் இதில் ஏதேனும் ஒரு மருந்தினை தெளித்து இந்நோயினை கட்டுப்படுத்தலாம். மேலும் இத்தருணத்தில் இலைசுருட்டுப் புழு நெற்பயிரில் தாக்கும் நிலை உள்ளது. இதனை

கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு குளோரிபைரிபாஸ் மருந்தினை தெளித்து கட்டுப்படுத்தலாம். மேற்கண்ட வழி முறைகளை பயன்படுத்தினால் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம் என தெரிவித்துள்ளனர்.

## காட்டு யானம் நெல் ரக பயிர் சாகுபடியில் விவசாயிகள் தீவிரம்

இயற்கை மருத்துவ குணம் கொண்ட காட்டுமன்னார் கோவில்:காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு நெற்பயிர் சாகுபடி மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நெற்பயிர் சாகுபடி கடந்த காலங்களில் இயற்கை உரங்களை பயன்படுத்தி சாகுபடி செய்தனர். இதன் மூலம் அறுவடை செய்யப்படும் நெல்லை பயன்படுத்தும்போது எவ்வித நோய்களும் ஏற்படுவதில்லை. மேலும் பழங்காலங்களில் நெல் சாகுபடியின்போது முழுக்க முழுக்க இயற்கை உரங்களையும், கால்நடைகளையும் பயன்படுத்தி சாகுபடி செய்தனர். நோய் தாக்குதலின் போது எவ்விதமான பூச்சிக் கொல்லி மருந்துகளையும் பயன்படுத்தாமல் இருந்தனர். பூச்சி தாக்குதலும் குறைவாக இருந்தது. தற்போது சாகுபடி செய்யும் முறைகள் அனைத்துமே விஞ்ஞான முறை என்ற பெயரில் அதிக அளவில் செயற்கை உரங்கள் பயன்படுத்தப்படுகிறது. நடவு செய்வதற்கு முன்பு நாற்றங்கால் தயார் செய்யும்போதே உரங்களை பயன்படுத்துகின்றனர். இவை அறுவடை செய்யும் வரை பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்தி வருகின்றனர். பூச்சிக் கொல்லி மருந்துகள் அதிகம் பயன்படுத்தப்படுவதால் அரிசி உணவு சாப்பிடுபவர்களுக்கு புதிய புதிய நோய்கள் ஏற்பட்டு வருகிறது. ஆயுள் காலமும் குறைந்து வருகிறது. கடந்த காலங்களில் 100 வயது வரை வாழ்ந்தார்கள். தற்போது 60 வயதிற்குள் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். இதற்கு முழுக்க முழுக்க பூச்சிக் கொல்லி மருந்துகள் பயன்படுத்தப்பட்ட அரிசி உணவே காரணம் என கூறப்படுகிறது. இவற்றை நிவர்த்தி செய்ய தற்போது பல்வேறு இடங்களில் பாரம்பரிய நெல் சாகுபடி முறையினையும், பழங்கால நெல் ரகங்களையும் இயற்கை உரங்களை பயன்படுத்தி

விவசாயம் செய்து விற்பனை செய்யும் நிலைக்கு வந்துள்ளனர். இதற்கு மக்கள் இடையே அதிக வரவேற்பு பெற்றுள்ளது. இயற்கை உணவு சார்ந்த மருத்துவங்களையே பொதுமக்கள் அதிக அளவு நாடிச் செல்கின்றனர். தற்போது சர்க்கரை நோய் மற்றும் பல்வேறு விதமான புற்று நோய்கள் ஏற்படுகிறது. இவற்றை நிவர்த்தி செய்யவே பாரம்பரிய நெல் ரகங்கள் பயிரிடப்படுகிறது. காட்டு யானம் என்ற பாரம்பரிய நெல் ரகத்தை அழிஞ்சிமங்கலம் கிராமத்தை சேர்ந்த கணேசன் என்ற விவசாயி திருத்துறைபூண்டியில் ஒரு விவசாயி பயிர் செய்ததை பார்வையிட்டு தற்போது தனது நிலப்பரப்பில் பயிரிட்டுள்ளார். இந்த நெல் ரகம் 7 அடி வரை உயரம் வளரக்கூடியது. ஒவ்வொரு கதிரிலும் நெல் மணிகள் கொத்துக் கொத்தாக வளரும். ஏக்கருக்கு 5 கிலோ வரை விதை நெல் தேவைப்படுகிறது. 18 நாட்களில் நாற்று தயாராகிவிடும். ஒரு அடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். 165 நாளில் அறுவடைக்கு தயாராகிவிடும். உரங்கள் தேவையில்லை. அதிக செலவும் இருக்காது. ஒரு ஏக்கருக்கு 20லிருந்து 25 மூட்டை நெல் கிடைக்கும். ஒரு மூட்டை ரூ.2 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. களை எடுப்பது குறைவு, மழை, வெள்ளம் மற்றும் வறட்சியை தாங்கி வளரக் கூடியது. நெற்பயிரின் தண்டு, இலை பகுதி வீரிய வளர்ச்சியுடன் உள்ளதால் பூச்சி நோய் தாக்குதல் ஏற்படாது. இந்த ரக அரிசி எளிதில் ஜீரணமாக கூடியது. உடல் நலத்தை காக்கும் வலிமையுடையது. ரத்த கொதிப்பு, சர்க்கரை நோய், நரம்புகளை பலப்படுத்தல் போன்ற மருத்துவ குணம் கொண்டது. இவ்வாறு சிறப்பு வாய்ந்த இந்த நெல் ரகத்தை இந்த பகுதியை சேர்ந்த விவசாயி பயிரிட்டுள்ளது இந்த பகுதி மக்கள் இடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

## ரூ.37 லட்சத்திற்கு பருத்தி விற்பனை

ராசிபுரம்: ராசிபுரத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ.37 லட்சத்திற்கு பருத்தி விற்பனையானது. ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி

விற்பனையாளர்கள் சங்கத்தின் (ஆர்சிஎம்எஸ்) சார்பில் கவுண்டம் பாளையம் குடோனில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம், வடுகம், நாமகிரிப்பேட்டை, தொப்பப்பட்டி, வடுகம் முனியப்பம்பாளையம், புதுப்பட்டி, சந்திரசேகர புரம், குருசாமிபாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலிருந்து 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் 2,509 மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். பின்னர், நடைபெற்ற ஏலத்தில் டி.சி.ஹெச். ரகம் அதிகபட்சமாக ரூ.4,756க்கும், குறைந்தபட்சமாக ரூ.4,191க்கும் ஏலம் போனது. ஆர்.சி.ஹெச். ரகம் அதிகபட்சமாக தி4,559க்கும், குறைந்தபட்சமாக தி3,619க்கும் ஏலம் போனது. இதன் மூலம் நேற்று ஒரேநாளில் ரூ.37 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது. திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்று பருத்தி கொள்முதல் செய்தனர்.

## உழவர் பாதுகாப்பு திட்டத்தில் 733 பயனாளிகளுக்கு ரூ.35 லட்ச நலஉதவி

திருச்சி: ஸ்ரீரங்கத்தில் நடந்த விழாவில் முதலமைச்சரின் உழ வர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 733 பயனாளிகளுக்கு ரூ.35லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவி களை அமைச்சர் பூனாட்சி வழங்கி னார். முதலமைச்சரின் உழவர் பாது காப்பு திட்டத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஸ்ரீரங்கம் ரெங்கபவனம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித்தார். அரசு தலைமை கொறடா மனோ கரன் முன்னிலை வகித்தார். விழாவில் ரூ 35.40 லட்சம் மதிப் பில் முதலமைச்சர் உழவர் பாது காப்பு நலத்திட்ட உதவிகளை 733 பயனாளிகளுக்கு அமைச்சர் பூனாட்சி வழங்கி பேசியதாவது: தமிழக முதல்வர் தேர்தல் அறிக்கையில் அறிவித்த அத்த னைத் திட்டங்களையும் நிறை வேற்றி வருகிறார். உழவர் பாது காப்பு

திட்டத்தின் கீழ் திருச்சி மாவட்டத்தில் 2011-12ம் ஆண்டு மட்டும் 6,839 பயனாளிகளுக்கு ரூ 4,40,09,050 கோடி மதிப்பிலும், 2012-13ம் ஆண்டில் 17,982 பயனாளிகளுக்கு ரூ 8,94,62,960 கோடி மதிப்பிலும், 2013-14ம் ஆண்டில் 16,285 பயனாளிகளு க்கு ரூ 7,46,54,300 கோடி மதிப் பி லும் நலஉதவி வழங்கப்பட்டுள் ளது. நடப்பு ஆண்டில் இதுவரை கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு, விபத்து நிவா ரணம் என 10,718 பயனளாளிகளுக்கும், நோயுற்ற காலத்திற்குரிய தற்காலிக ஓய்வூதியம் 780 பயனாளிகளுக்கும், எச்.ஐ.வி.யி னால் பெற்றோரை இழந்த 3 குழந்தைகளுக்கு என மொத்தம் 11,501 பயனாளிகளுக்கு நலத்திட்ட உத விகள் வழங்கப்பட்டுள்ளது.

விழாவில் கல்வி உதவித் தொகை 516 பேர், திருமண உதவித்தொகை 94 பேர், இயற்கை மரணம் 77 பேர், நலிந்தோர் நலத்திட்ட உதவி 44 பேர், விபத்து நிவாரண உதவித்தொகை 2 பேர் என மொத்தம் 733 பயனாளிகளு க்கு ரூ 35,40,500 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள் ளது என தெரிவித்தார். நிகழ்ச்சியில் எம்பிக்கள் குமார், ரத்தின வேல், எம்எல்ஏக் கள் பரஞ்ஜோதி, சிவபதி, இந்திராகாந்தி, மாவட்ட ஊராட்சி தலை வர் ராஜாத்தி, கோட்ட தலைவர் கள் லதா, சீனிவாசன், ஞானசேகரன், கவுன்சிலர்கள் பெஸ்ட்பாபு, முத்துலட்சுமி, பச்சையம்மாள், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராமு, மணிகண் டம் ஒன்றியக்குழுத்தலைவர் முத்துக்கருப்பன், ஸ்ரீரங்கம் தாசில்தார் காதர் மொய் தீன் உட்பட பலர் கலந்து கொண் டனர். முன்னதாக மாவட்ட வருவாய் அலுவலர் தர்ப்பகராஜ் வரவேற்றார். முடிவில் ஆர்டிஓ சந்தோஷினி சந்திரா நன்றி கூறினார்.

## <u>சின்ன வெங்காயம் ஏலம்</u>

திருச்சி: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை சின்னவெங்காயம் மறைமுக ஏலம் நடைபெறுகிறது. திருச்சி வேளாண்

விற் பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இயங்கி வருகிறது. இங்கு சின்ன வெங் காயம் மறைமுக ஏலம் நாளை 10 ம் தேதி நடைபெறவுள்ளது. துறை யூர், உப்பிலியபுரம், தா. பேட்டை உள்ளிட்ட வட்டாரங்களில் சின்ன வெங் காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத்துள்ள விவசாயிகள், தங்களிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறையூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு கொண்டுவந்து மறை முக ஏலத்தில் பங்கேற்க லாம். இங்கு சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைப்பதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்கு டன் பணத்தை பெற்று கொள்ளலாம்.

## <u>நடப்பு நிதியாண்டில் 4996 வெள்ளாடுகள் வழங்க இலக்கு நிர்ணயம்</u>

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ரூ.6.6 கோடி மதிப்பீட்டில் 4996 வெள்ளாடுகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவித்தார். கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் வெள்ளாடுகள், கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 47 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள் மற்றும் தலா ரூ.2150 வீதம் பராமரிப்பு உதவித் தொகைக்கான காசோலை வழங்கும் விழா கலெக்டர் கணேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பயனாளிகளுக்கு காசோலைகளை வழங்கி அமைச்சர் சுப்ரமணியன் பேசியதாவது: பல்லவராயன்பட்டி கிராமத்தில் 30 பயனாளிகளுக்கு தலா 4 வெள்ளாடுகள் வீதம் 120 வெள்ளாடுகள் ரூ.3.96 லட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் பிசானத்தூர் கிராமத்தில் 17 பயனாளிகளுக்கு தலா 4 வெள்ளாடுகள் வீதம் 68 வெள்ளாடுகள் ரூ.2.24 லட்சம் மதிப்பீட்டிலும் ஆக மொத்தம் 47 பயனாளிகளுக்கு தலா 4 வெள்ளாடுகள் வீதம் 188 வெள்ளாடுகள் ரூ.6.20 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 47 பயனாளிகளுக்கு ஆட்டுக்கொட்டைகள் அமைப்பதற்கு ரூ.2000, மேலும் வழங்கப்பட்டுள்ள வெள்ளாடுகளை

தங்கள் இருப்பிடத்துக்கு கொண்டு செல்வதற்கு போக்குவரத்து செலவினமாக ரூ.150 ஆக மொத்தம் தலா ஒரு பயனாளிக்கு ரூ.2150 வழங்கப்பட்டுள்ளது. எனவே, பயனாளிகள் நல்ல முறையில் வளர்ப்பதுடன் ஆடுகள் ஈனும் குட்டிகள் மூலம் நல்ல வருமானத்தை பெருக்கிக்கொண்டு தங்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும், தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் வெள்ளாடுகள் மற்றும் செம்மறிஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.506.36 கோடி செலவில் 4 லட்சம் பயனாளிகளுக்கு தலா 4 ஆடுகள் வீதம் வழங்கப்பட்டு இதன் மூலம் 11.57 லட்சம் குட்டிகள் ஈனப் பட்டுள்ளன. மேலும் தமிழக அரசு நமது மாவட்டத்திற்கு 2014-15ம் நிதியாண்டுக்கு ரூ.6.6 கோடி மதிப்பீட்டில் 4996 வெள்ளாடுகள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூ.416.46 லட்சம் மதிப்பீட்டில் 3155 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1841 வெள்ளாடுகள் விரைவில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்றார். விழாவில் டிஆர்ஓ மாரிமுத்து, ஆர்டிஓ (பொறுப்பு) நந்தீஸ்வரன், கந்தர்வக்கோட்டை ஒன்றியக் குழுத் தலைவர் சின்னப்பா, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் (பொறுப்பு) தேவதாஸ், உதவி இயக்குநர் குருசாமி, நகர்மன்ற உறுப்பினர் பாஸ்கர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அண்ணாதுரை, துரைராஜ், அட்மா குழுத் தலைவர் ரங்கராஜன், நில வள வங்கித் தலைவர் சண்முகம், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் செங்கோடன், பாண்டியன், ஊராட்சி தலைவர் முருகேசன், லதா அர்ச்சுனன் மற்றும் நாராயணசாமி, தாசில்தார் ரேணுகாதேவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முத்து, கருப்பையா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## புதுகை, திருமயத்தில் மழை

திருமயம்: புதுகை, திருமயத்தில் நேற்று மாலை பலத்த மழை பெய்தது. இந்த திடீர் மழையால் சாலைகளில் தாழ்வான பள்ளங்களில் வெள்ளம் போல் மழை நீர் தேங்கி நின்றதால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர். அதே வேளையில், திருமயம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள குளங்கள், ஏரிகளில் வரத்து வாய்க்கால் மூலம் நீர்வரத்து அதிகரித்தது. இதனால், சம்பா நெல் நடவு செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதேபோல் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக மழை பெய்தது.

## தொடரும் விசேஷ தினங்கள் செண்டு மல்லி விலை உயரும் வாய்ப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

செம்பட்டி: அம்பாத் துரை பகுதியில் பறிக்கப்ப டும் செண்டு பூக்கள் வெளிமாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. வரும் விசேஷ நாட்களில் பூக்க ளின் விலை உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னாளபட்டி அருகே உள்ள அம்பாத்துரை, ஊத்துப்பட்டி, காமலாபுரம், பெருமாள் கோவில்பட்டி, ஜாதிக்கவுண்டன் பட்டி, தொப்பம்பட்டி உள்ளிட்ட பல கிராமங்களில் பூ விவசாயிகள் சம்பங்கி, செவ் வந்தி, மல்லிகை, ஜாதிப்பூ, செண்டு பூக்களை பயிரிட்டு இருந்தனர். பூ மாலைகள் திருமண வரவேற்பு தட்டிகளுக்கு பயன்படுத்தப் படும் செண்டு பூக்கள், மஞ்சள், மஞ்சளோடு கூடிய பளுப்பு நிறம், ஆரஞ்சு நிறங்களில் மலர்ந்து பார்ப்பதற்கு சூரியகாந்தி பூக்கள் போல் காட்சி யளிக்கிறது. செண்டு பூக்கள் மார்க்கெட்டில் தற்போது ஒரு கிலோ ரூ.50க்கு விற்கப்படுகிறது. அம்பாத்துரை பகுதியில் தினசரி பூ விவசாயிகள் அதிகாலை நேரங்களில் பூக்களை பறித்து 7மணிக்குள் நிலக்கோட் டை மற்றும் திண்டுக்கல் பூ மார்க்கெட்டிற்கு கொண்டு செல்கின்றனர். பின்னர் லாரிகள் மூலம் சென்னை, கோவை, திருச்சி

ஆகிய நகரங்களுக஁கு பூக்களை அனு ப்பி வைக்கின்றனர். செண்டு பூ விவசாயிகள் கூறுகையில், செண்டு பூக் கள் செவ்வந்தியை போல நாற்று விட்டுத்தான் நடவு செய்ய முடியும், மண் வளத் தைப் பொறுத்து பூக்களின் நிறம் சிறிது மாறும். புரட்டாசி மாதம் நாற்று களை பிடுங்கி நடவு செய் தோம். மானாவாரியாக பயிரிட்டிருப்பதால் தண்ணீர் பாச்ச தேவையி ல்லை. ஈரப்பதத்திலேயே வளர்ந்துவிடும் புரட்டாசி மாதம் நடவு செய்து, தற்போது கார்த்திகை மாதம் நாங்கள் அறுவடை செய்து வருகிறோம். ஏக்கர் ஒன்றுக்கு வாரம் ஒரு முறை 300 முதல் 400 கிலோ வரை பூக்களை பறிக்கலாம். இப்போது சபரிமலை ஐயப் பன் கோவில் சீசன் என்ப தால் பூ மார்க்கெட்டில் ஒரு கிலோ செண்டு ரூ.50க்கு விற்கப்படுகிறது. இனி ஒரு கிலோ ரூ.100 வரை விற் கலாம் எதிர்பார்க஁கப்படுகிறது என்றார். அடுத்து வரும் விசேஷ நாட்களில் ஒரு கிலோ ரூ.150 வரை விலை போகும் என்பதால், செண்டு பூ விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## ரூ.100 கோடி பயிர்காப்பீடு நிவாரணம் 48 ஆயிரம் விவசாயிகளுக்கு டிச.25க்குள் வழங்க கலெக்டர் உறுதி

தூத்துக்குடி: 'தூத்துக் குடி மாவட்டத்தில் 47,862 விவசாயிகளுக்கு ரூ.100 கோடியே 3 லட்சத்து 68 ஆயிரத்து 191 பயிர் காப்பீடு தொகை வரும் 25ம் தேதிக்குள் வழங்கப்படும்' என கலெக்டர் ரவிக்குமார் தெரிவித்தார். தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் நடந்தது. பொதுமக்களிடம் மனுக்களை பெற்ற கலெக்டர் ரவிக்குமார், பின்னர் அளித்த பேட்டி: தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2012-13ம் ஆண்டில் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட சோளம், கம்பு, மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, சூரியகாந்தி, நெல், ஆகியவை தண்ணீர் இல்லாமல் வாடியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். அவர்களுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் வறட்சி நிவாரணத் தொகை வழங்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அதன்பேரில் தூத்துக்குடி

மாவட்டத்தில் 47,862 விவசாயிகளுக்கு ரூ.100 கோடியே 3 லட்சத்து 68 ஆயிரத்து 191 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நிவாரண தொகை வரும் 25ம் தேதிக்குள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். மாவட்டத்தில் ஆதார் அட்டைக்கு போட்டோ எடுக்கும் பணி 78 சதவீதம் முடிந்து விட்டது. தற்போது 8 தாலுகா, தூத்துக்குடி மாநகராட்சி, கோவில்பட்டி மற்றும் காயல்பட்டினம் நகராட்சி ஆகிய 11 இடங்களில் போட்டோ எடுக்க நிரந்தர முகாம் அமைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி விவிடி சிக்னல் பகுதியில் மேம்பாலம் கட்டும் பணிக்காக நிலம் கையகப்படுத்தப் படுகிறது. இதில் நில உரிமையாளர்களுக்கு இழப்பீடு தொகை வழங்குவதற்காக இன்றைய சந்தை நிலவரப்படி திட்ட மதிப்பீடு தயார் செய்ய தாசில்தாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள 403 பஞ்சாயத்துகளிலும் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு இடங்களில் சீம கருவேல மரங்களை அகற்றுவதற்கு மதிப்பீடு தயார் செய்ய பஞ்சாயத்தில் உள்ள ஊழியர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. முற்கட்டமாக ஓட்டப்பிடாரம் தாலுகா வில் 10 கிராமங்களை தத்தெடுத்து சீம கருவேல மரங்களை அகற்றுவதற்கான மதீப்பீடு தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். முன்னதாக மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை மூலம் 3 பேருக்கு தையல் மிஷின், கருங்குளம் யூனியனில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து மரணமடைந்த சுப்பிரமணியன் மகன் சங்கரமூர்த்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளருக்கான பணி நியமன ஆணை மற்றும் ஸ்கேட்டிங் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் மாநில, மண்டல, மாவட்ட அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை கலெக்டர் ரவிகுமார் வழங்கினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோடியக்கரையில் மீன்வரத்து அதிகரிப்பு மீனவர்கள் மகிழ்ச்சி</u>**

கோடியக்கரையில் மீன்வரத்து அதிகமாக உள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சிஅடைந்துள்ளனர்.

மீன்பிடிசீசன்

வேதாரண்யம் தாலுகா கோடியக்கரையில் ஆண்டுதோறும் அக்டோபர் முதல் மார்ச் மாதம் வரை மீன்பிடி சீசன்ஆகும். இந்த காலத்தில் தஞ்சை, நாகை, புதுக்கோட்டை, காரைக்கால், தூத்துக்குடி, ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த மீனவர்கள் சுமார் 500-க்கும் மேற்பட்ட படகுகளில் வந்து கோடியக்கரையில் தங்கி மீன்பிடி தொழில் செய்து வருகின்றனர். இந்த ஆண்டு சீசன் தொடக்கத்தில் இருந்தே மீன் வரத்து மிக குறைவாக இருந்ேதது. சீசன் காலத்தில் சீலா, வாவல், காலா, பாறை, சுறா, கெளுத்தி, கட்லா மற்றும் இறால், நண்டு வகைகள் அதிகம் கிடைக்கும். புயல் சின்னம் காரணமாக கடந்த ஒரு வாரமாக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. தற்போது கடந்த 2 நாட்களாக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்கின்றனர். ஒரு வாரம் மீன்பிடிக்காத நிலையில் அதிக அளவில் மீன்கள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். அவர்கள் எதிர்பார்த்தது போலவே அதிக அளவு வாவல் மீன்கள் கிடைத்தன. மேலும் சீலா, காலா, கொடுவா, சுறா, சடையன், பன்னா, உல்லான், நீலக்கால் நண்டு, புள்ளி நண்டு, கல் நண்டு ஆகியவை அதிக அளவில் கிடைத்தன. மீன்கள் அதிகம் கிடைப்பதால் தற்போது முழு வீச்சில்

மீனவர்கள்மீன்பிடிக்கச்செல்கின்றனர்.

ஒருமாதம்நீடிக்கும்

மீனவர்களின் வலையில் அதிக அளவு சிக்கும் வாவல் மீனும், நண்டும் சிங்கபூருக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இதனால் நல்ல விலை கிடைக்கிறது. பெரும்பாலான மீனவர்கள் வாவல் மீன் பிடிப்பதற்காக அதிக அளவில் கடலுக்குச் செல்கின்றனர். இதனால் கோடியக்கரையில் மீன்பிடி சீசன் களைகட்ட தொடங்கியுள்ளது. இந்த வாவல் மீன் சீசன் இன்னும் ஒரு மாதம் நீடிக்கும் என மீனவர்கள் தெரிவித்தனர். இது குறித்து கோடியக்கரை மீனவர் நலச்சங்க முன்னாள் தலைவர் சித்திரவேல்கூறியதாவது:-

ரூ.50கோடிமீன்வர்த்தகம்

கோடியக்கரையில் ஆண்டு தோறும் அக்டோபர் முதல் ஆறு மாதத்திற்கு மீன்பிடி சீசன் காலமாகும். பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் இங்கு வந்து தங்கி மீன் பிடிப்பார்கள். சீசன் காலத்தில் சுமார் ரூ.50 கோடி அளவில் மீன் வர்த்தகம் நடைபெறும். வழக்கமாக வடகிழக்கு பருவமழை பெய்ய தொடங்கியவுடன் கோடியக்கரையில் அதிக அளவில் மீன்கள் கிடைக்கும். தற்போது கடந்த ஒரு வாரமாக கடல் சீற்றத்தினால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லாததால், மீனவர்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டது. ஆனால் தற்போது 2 நாட்களாக அதிக அளவில் மீன்கள் கிடைக்கின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## <u>பெரம்பலூரில் பறவை காய்ச்சல் கண்காணிப்பு குழு கூட்டம் கால்நடை டாக்டர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தல்</u>



ஆலோசனை கூட்டத்தில் கலெக்டர் தரேஸ் அஹமது பேசியபோது எடுத்த படம்.

பெரம்பலூரில் பறவை காய்ச்சல் கண்காணிப்பு குழு கூட்டம் கலெக்டர்தரேஸ் அஹமது தலைமையில் நடைபெற்றது.இதில்

கோழிக்கடை, பண்ணைகளை வாரந்தோறும் ஆய்வு செய்ய வேண்டும் என கால்நடை டாக்டர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கண்காணிப்புகுழுகூட்டம்

பெரம்பலூர் மாவட்டத்தில்¢ அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் கலந்து கொண்ட பறவைக் காய்ச்சல் கண் காணிப்பு குழு ஆலோசனை கூட்டம் கலெக்டர்தரேஸ் அஹமது தலைமையில் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில்கலெக்டர்பேசியதாவது:-

கேரளமாநிலத்தில் உலக அளவில் பல்வேறு நாடுகளில் பறவை இனங்களில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வரும் பறவை காய்ச்சல் நோய் தற்போது கேரள மாநிலத்தில் வாத்துகளில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. வைரஸ் கிருமிகளால் உண்டாகும் இந்நோய் பறவைகள் மற்றும் கோழி இனங்களில் கடுமையான பாதிப்பையும் இறப்பினையும் ஏற்படுத்தக் கூடியது. மேலும் இந்நோய் பறவை மற்றும் கோழிகளிலிருந்து மனிதர் களுக்கும் பரவி ஆபத்தினை ஏற்படுத்தக்கூடியதாகும். தற்போது இந்நோய் தமிழகத்தில் இல்லை என்றாலும் அண்டை மாநிலமான கேரளாவில் இந்நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் பெரம்பலூர் மாவட்டத்தில் பறவை காய்ச்சல் நோய் குறித்து “தீவிர கண்காணிப்புக் குழு“ ஏற்படுத்தப்பட்டு நோய் கண்காணிப்பு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிருமிநாசினி

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 8 முட்டை உற்பத்தி செய்யும் கோழிப் பண்ணைகள் மற்றும் 140 கறிக்கோழிப் பண்ணைகளிலும் அப் பகுதியை சேர்ந்த கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களால் தினசரி கண்காணித்து கோழிகளில் ஏதேனும் அசாதாரண இறப்பு ஏற்பட் டால் அது குறித்து விபரம் அளிக்க வேண்டும். கோழிப் பண்ணையாளர்கள் தங்களது பண்ணைகளில் கிருமி நாசினி தெளித்திடவும் வெளி யாட்கள் யாரையும் பண்ணைகளில் அனுமதிக்கக் கூடாது. பண்ணைக்கு வரும் வாகனங்களை கிருமி நாசினி மூலம் சுத்தம் செய்த பின்னரே அனுமதிக்க

வேண்டும். மேலும் பண்ணைகளில் அனைத்து இன பறவைகளையும் கொண்ட கலப்பு பண்ணையாக பராமரித்தல் கூடாது. வனத்துறையினர், வனப் பகுதிகளில் வெளியூர் களி லிருந்து மற்றும் வெளிமாநிலங்களில் இருந்து இறை தேடிவரும் பறவை இனங்களில் இறப்பு அல்லது நோய் வாய்ப்பட்டிருப்பின் அதன் விவரங்களை கண்டறிந்து உடனுக்குடன் தகவல் தெரிவிக்க வேண்டும். வாரந்தோறும் அறிக்கை சத்துணவு மற்றும் அங்கன் வாடிகளில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் கோழி முட்டைகளை நன்றாக வேகவைத்த பின்னரே வழங்க அறிவுறுத்தப்பட்டு, அதனடிப்படையில் வழங்கப் படுகின்றது. அனைத்து கால்நடை உதவி மருத்துவர்களும் தங்களது பகுதியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார மருந்தக மருத்துவர்களை தினசரி தொடர்பு கொண்டு பறவை காய்ச்சல் தொடர்பான அறிகுறிகள் உள்ள நோயாளிகள் எவரேனும் உள்ளனரா என கேட்டறிய வேண்டும். கால்நடை உதவி மருத்துவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கோழிக் கடைகள் மற்றும் புறக்கடை கோழிப் பண்ணைகளையும் ஆய்வு செய்து வாரந்தோறும் தவறாது அறிக்கை சமர்ப்பித்திட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். இக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட கால்நடை பராமரிப் புத்துறை மண்டல இணை இயக்குநர் சந்திர சேகரன், கால்நடைத்துறை சிறப்பறிஞர் மோகன், உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் புஷ்பராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் 2014-15-ம் ஆண்டில் 4,996 விலையில்லா வெள்ளாடுகள் வழங்க இலக்கு நிர்ணயம் அமைச்சர் சுப்ரமணியன் தகவல்



புதுக்கோட்டை மாவட்டத்தில் 2014-15-ம் ஆண்டிற்கு, 4996 விலையில்லா வெள்ளாடுகள் வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது என அமைச்சர் சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

விலையில்லாவெள்ளாடுகள்

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 47 பயனாளிகளுக்கு விலையில்லா வெள்ளாடுகள் மற்றும் பராமரிப்பு உதவி தொகைக்கான காசோலைகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு கலெக்டர் கணேஷ் தலைமை தாங்கினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் சுப்ரமணியன் பயனாளிகளுக்கு வெள்ளாடுகள் மற்றும் பராமரிப்பு தொகைகள் வழங்கி பேசினார். அப்போதுஅவர்பேசியதாவது:-

தமிழக அரசு கால்நடை பராமரிப்புத்துறையின் கீழ் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக ஏழை, எளிய மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்தில் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பராமரிப்புதொகை

அதனடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பல்லவராயன்பட்டி கிராமத்தில் 30 பயனாளிகளுக்கு தலா 4 விலையில்லா வெள்ளாடுகள் வீதம் 120 வெள்ளாடுகள் வழங்கப்பட்டுள்ளது. பிசானத்தூர் கிராமத்தில் 17 பயனாளிகளுக்கு தலா 4 விலையில்லா வெள்ளாடுகள் வீதம் 68 வெள்ளாடுகள் என மொத்தம் 47 பயனாளிகளுக்கு தலா 4 வெள்ளாடுகள் வீதம் 188 வெள்ளாடுகளும் மேலும் 47 பயனாளிகளுக்கு ரூ.2 ஆயிரத்து 150 வீதம் ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்து 50 மதிப்பில் பராமரிப்பு உதவி தொகைக்கான காசோலை களும்வழங்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள்

தமிழக அரசு புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2014-15-ம் நிதியாண்டிற்கு 4,996 விலையில்லா வெள்ளாடுகள் வழங்க இலக்கு நிர்ணயித்துள்ளது. மீதமுள்ள 1,841 விலையில்லா வெள்ளாடுகள் விரைவில் பயனாளி

களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அதிகாரி மாரிமுத்து, வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) நந்தீஸ்வரன், ஒன்றிய குழுத்தலைவர் (கந்தர்வக்கோட்டை) சின்னப்பா, இணை இயக்குனர் தேவதாஸ், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் அண்ணாதுரை, ஆத்மா குழுத்தலைவர் ரங்கராஜன், ஊராட்சி மன்றத்தலைவர் முருகேசன், வட்டாட்சியர் ரேணுகாதேவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**முண்டியம்பாக்கம் ரெயில் நிலையத்திற்கு சரக்கு ரெயில் மூலம் 2,500 டன் உரம் வருகை**



விக்கிரவாண்டி, முண்டியம்பாக்கம் ரெயில் நிலையத்திற்கு சரக்கு ரெயில் மூலம்2,500டன்உரம்வந்தது.

2,500டன்உரம்வருகை

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த வடகிழக்கு பருவமழையின் காரணமாக விவசாயிகள் தீவிர விவசாய பணியை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் உரத்தின் தேவை அதிகரித்துள்ளது. எனவே உரத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் மாவட்ட நிர்வாகம் முகவர் மூலம் வெளிமாநிலங்களில் இருந்து உரங்களை இறக்குமதி செய்து வருகிறது. அதன்படி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இருந்து 2,500 டன் உர மூட்டை களை கொள்முதல் செய்து அவை 42 பெட்டிகள் கொண்ட சரக்கு ரெயில் மூலம் முண்டியம்பாக்கம் ரெயில் நிலையத்திற்கு நேற்று காலை வந்தது. இதை தொடர்ந்து அந்த உர மூட்டைகள் அனைத்தும் லாரிகளில் ஏற்றப்பட்டு விழுப்புரம் மாவட்டம் முழுவதும் உள்ள

விற்பனையாளர்களுக்கு அனுப்பி வைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.